1973 நவம்பர் 20]

அல்லது மலேரியா ஒழிப்பு அலுவலர் மூலமாகத் தஞ்சை மருத்துவமனை வட்டாரத்திலுள்ள கொசுத் தொல்லையை ஒழிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், வடிகால் கட்ட வேண்டுமென்பதை ஏற்று பொதுப்பணித் துறையினரை நிறைவேற்றுமாறு கேட்டிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : இந்தக் கொசுக்கள் என்றும் இல்லாத அளவில் இப்போது உலகத்தில் பெருகி இருப்பதாகவும் டி.டி.டி. போன்ற மருந்துகளுக்கும் இம்யூன் ஆகிவிடுவதாகவும் கூறுகிறார்கள். இது உண்மையா?? இதனால் மலேரியா அதிகமாக இருப்பதும் உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த ஒரு மருந்தும் முதலில் அதனுடைய உரிய பலனைத் தந்தாலும்கூட அதையே தொடர்ந்து பயன்படுத்துகிறபோது அதனுடைய பலன் குறைந்து விடுகிறது. அந்த முறையில் கொசு ஒழிக்கப் பயன்படுத்தப்படுகிற மருந்துகள் சில இடங்களில் முழுப் பலன் தராமல் போய்விடுகிறது. அதனால் மலேரியா போன்றவை அதிகமாகி இருக்கிறது என்பது முழு உண்மை அல்ல. மலேரியா ரெகரிங்காக—திரும்பத் திரும்ப வரக்கூடிய நோய். அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டும்.

Use of radio-active atoms to diagnose diseases

* 210 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal to use radio-active atoms in the Madras City Hospitals to diagnose the diseases of abnormalities in the brain, thyroiod glands, lungs, heart, etc.; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை நீங்கலாக ஏனைய மருத்துவ மனைகளில் கதிரியக்க ஓரக தனிமங்கள் (Radio-active isotopes) பயன்படுத்தும் செயற்குறிப்புகள் எவையு மில்லை, இவ்விரு மருத்துவமனைகளிலும்கூட இவற்றைப் பயன் படுத்தும் முறை தொடக்க நிலையில்தான் உள்ளது.

[1973 நவம்பர் 20

திரு. என். கே. பழனிசாமி : கடுமையான நோய்களை எல்லாம் கண்டு பிடிக்கும் அளவுக்கு மற்ற நாடுகளைப் போல் நம்முடைய நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் இந்தக் கதிரியக்கத் தனி மங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மற்ற நாடுகளைப் போல என்று சொல்லும்போதே, மற்ற நாடுகளுடைய பொருளாதார நிலைமை என்ன நம்முடைய நாட்டுப் பொருளாதார நிலைமை என்ன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். திறமையுள்ளவர்கள் நம்மிடம் இருந்தால்கூடப் போதுமான கருவி வசதிகள் நம்மிடத்தில் இல்லை. இது வெளிநாட்டுச் செலாவணி அனுமதியுடனேயே நிறைவேற்றப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் தற்போது சென்னை பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இதைப் பயன்படுத்தும் முறை ஓரளவு நடைபெறுகிறது. இங்கும் தொடக்க நிலையில்தான் இருக்கிறோம். எதிர்காலத்தில் அதற்குத் தேவையான வசதிகள் செய்தாகவேண்டும்.

பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள்

* 211 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் எத்தனை விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : திருச்சி மாவட்டத்தில் பின்தங்கிய மாணவர் விடுதிகளுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தின்கீழ் 15 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு உத்தேசித்துள்ளது.

* 212 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?